<u>அன்புப் பரிசு, அன்பே பரிசு</u>

நான் ஒரு தொடக்கப்பள்ளி ஆசிரியர். பெயர், அருண். வயது, முப்பத்து ஏழு. திருமணம் இன்னும் ஆகவில்லை. ஏன் என்று என்னை இதுவரை நச்சரிக்காதவர் மிகக் குறைவு.

"நல்ல வேலையில் இருக்கே, கைநிறைய சம்பாதிக்கிறே, நல்ல பொண்ணா பாத்து கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே, நம்ம தமிழ் பொண்ணா பாத்து கட்டிக்கோப்பா", என்பது வழக்கமாக அறுபது வயதைக் கடந்த உறவினர்கள் திருமணம் அல்லது மற்ற நிகழ்ச்சிகளில் சந்திக்கும்போது, நான் கேட்காமலேயே கொடுக்கும் அறிவுரை அது. இதனால் நான் பல உறவினர்கள் ஏற்பாடு செய்து அழைக்கும் நிகழ்ச்சிகளை இப்போது தவிர்த்து விடுகிறேன். ஏன் அங்கே சென்று, அதே பல்லவியைக் கேட்க வேண்டும்

என்று உறவினர்கள் கூட்டத்தை விட்டு விலகிக் கொண்டேன்.

நீங்களும் அதே கேள்வியைக் கேட்பதற்கு முன்னர் உங்களுக்கு விளக்கி விடுகிறேன். எனக்கு வேலைக்குச் சென்று வீடு திரும்பி, என்னுடைய தனிப்பட்ட வேலைகளைக் கவனித்துவிட்டு, கொஞ்சநேரம் தொலைக்காட்சி பார்த்தபிறகு தூங்கத்தான் நேரம் இருக்கிறது. பள்ளியில் வேலை அதிகம், அடிக்கடி அவற்றை வீட்டுக்குக் கொண்டுவந்து செய்து முடிப்பேன். ஆசிரியர் தொழில் என்றால், பள்ளிக்குச் சென்று பாடம் நடத்திவிட்டு, மதியம் வேலை முடிந்ததும் வீட்டுக்குத் திரும்பி காலாட்டிக் கொண்டு இருப்பார்கள் என்று நினைப்பவர்கள், அவர்களின் சிந்தனையை அப்படியே புதைத்துவிட வேண்டும். இந்த வேலைக்கு முடிவே இல்லை. ஆசிரியர் தொழிலில் உள்ள வேலைப் பளு தாங்க

முடியவில்லை என்று அதில் இருந்து ஒதுங்கியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். நான் அப்படி ஒரு போதும் ஆசிரியர் வேலையில் இருந்து வேறு வேலை தேட வேண்டும் என்று நினைத்ததே இல்லை. எனக்கும் வேலைச் சுமை அதிகம்தான் என்றாலும் ஆசிரியர் வேலை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது. வேலையைச் சுமையாக நினைக்காமல், சுகமாகக் கருதிவருகிறேன். இன்னும் சில ஆண்டுகளில் துணைத் தலைமை ஆசிரியர் ஆகும் தகுதிகள் எனக்கு இருப்பதாக, என் பள்ளி முதல்வர் சொல்லி இருக்கிறார். கவனம் எல்லாம் வேலையில் இருப்பதால், காதல் கொள்ளக் காதலியையோ, மனைவியையோ தேட எனக்கு நேரம் கிடைக்கவில்லை.

நான் பார்க்க சுமாராகத்தான் இருப்பேன். நான் சூர்யா, அஜித், விஜய், ஆர்யா, விஷால் போன்ற

சினிமா நடிகர்களுக்கு எந்தவிதத்திலும் போட்டி இல்லை. அவர்கள்தான் எனக்குப் போட்டியாக இருந்து வருகிறார்கள். இதனால் தாழ்வு மனப்பான்மை எனக்குள் இருக்கிறது என்று தவறான மனக்கணக்குப் போடத் தேவையில்லை. நான் பார்க்க சுமாராகத்தான் இருப்பேன் என்ற உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். அதிக அழகும் இல்லை, அளவுக்கு அதிமாக அசிங்கமும் இல்லை என்பதுதான் அதன் அர்த்தம். இப்போதுள்ள படித்த அழகான பெண்கள் அழகாக இருப்பதோடு அதிகம் சம்பாதிக்கும் ஆண்களைத்தான் நாடிச் செல்கிறார்கள் என்று நினைக்கிறேன். வங்கியில் சேமிப்பு, மத்திய சேமநிதியில் வீடு வாங்கும் அளவுக்குப் பணம், கார் என்று இருக்கும் ஆண்களுக்கு, எனக்குத் தெரிந்து சீக்கிரமே திருமணம் ஆகிவிடுகிறது. அந்தப் பட்டியலில் உள்ளவற்றில் பாதி தகுதி எனக்கு

இருந்தாலும் என்னை விரும்பி ஏற்றுக் கொள்ளும் பெண் இன்னும் என் கண்ணில் படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

என் நண்பர்கள் இப்போது வட்டமும் சிறியது அல்லது சுருங்கிவிட்டது. உடன் படித்த மாணவர்களும், இரண்டரை ஆண்டு தேசிய சேவையின்போது கிடைத்த நல்ல நண்பர்களும் இப்போது குடியும் குடித்தனமுமான இருக்கிறார்கள். பல்கலைக் கழக நண்பர் வட்டமும் இருக்கிறது. முன்பெல்லாம் வாரம் இருமுறை வெளியே சென்றோம், இப்போது மாதம் ஒருமுறை சந்திப்பதே அரிது. இணையத் தளத்தின் சமூகப் பக்கங்கள் எங்களை இணைக்கின்றனவே தவிர நாங்கள் இணைந்து வெளியில் செல்வது மிகக் குறைவு. அவர்கள் குடும்பத்தோடு சிரித்தபடி எடுத்த படங்களைப் பார்த்து, அதற்குக் கீழே இரண்டு வரி

சுருக்கமாக எழுதிவைப்பேன். இந்தத் தொடர்பைத் தவிர நண்பர்களுக்கும் எனக்கும் சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைப்பது மிகக் குறைவு.

"அப்படி என்ன அருண் நேரமே இல்லை? உன்னை மாதிரி வேறு ஆசிரியர்கள் இல்லையா? அவங்க கல்யாணம் பண்ணிக்கிட்டு குடியும் குடித்தனமாக இல்லையா? உன் கூட படிச்ச அத்தனை பையனுங்களும் கல்யாணம் பண்ணிக்கிட்டு இப்போ பிள்ளைகளோட இருக்கானுங்க" அது அறுபது வயதைக் கடந்த என் அம்மாவின் பூபாளம். எனக்கு நல்ல வாழ்க்கை அமைத்து வைத்துவிட வேண்டும் என்று துடிக்கும் நல்ல உள்ளம் அது.

நான் என் பெற்றோருக்கு ஒரே பையன், அப்பா சில ஆண்டுக்கு முன் இறந்து விட்டார். நான்தான் அம்மாவைக் கவனித்துக் கொள்கிறேன், அல்லது

அம்மாதான் என்னைக் கவனித்துக் கொள்கிறார். எப்படி இருந்தாலும் நாங்கள் ஒருவருக்கு ஒருவர் துணை.

"ஒரு பேரப்பிள்ளையைப் பாத்துட்டு, நான் கண் மூடிட்டா, நிம்மதியா சொர்க்கம் போய் சேர்ந்துடுவேன்," அது பேரப்பிள்ளையைத் தூக்க வேண்டும், தலைமுறை தழைக்க வேண்டும் என்று ஏங்கும் என் அம்மாவின் வேண்டுகோள். வம்சம் அழிந்துவிடக் கூடாது என்று துடிக்கும் மனித குலத்தின் தாகம் என்றுதான் அது எனக்குப் பட்டது.

ஞாயிற்றுக்கிழமை தோறும் நான் வீட்டில் இருக்கும்போது, தூங்காத நேரத்தில், தேர்வுத் தாள்களையும் மற்ற பள்ளி வேலைகளையும் வீட்டில் செய்யாமல் இருக்கும்போது, அம்மா பேரப் பிள்ளை பற்றியப் பேச்சை எடுப்பார்.

சொந்த வாழ்க்கை எந்தத் திசையில் செல்கிறது என்பதைப் பற்றி நான் அதிகம் அலட்டிக் கொண்டவன்

இல்லை. திருமணம் நடக்கும்போது நடக்கட்டும், சரியான துணை வரும்வரை காத்திருப்போம் என்பதுதான் என் எண்ணம். ஆனால் அதைவிட முக்கியமாக, எனக்குள் திருமணத்தைப் பற்றி ஒரு விரக்தி ஏற்பட்டு இருந்தது என்பதுதான் உண்மை. என் பள்ளியில் படிக்கும் மாணவர்களில் பாதிபேரின் பெற்றோர், சேர்ந்து வாழவில்லை. குடும்பச் சண்டை, விவாகரத்து, மனைவியும் கணவனும் பிள்ளையைக் கவனிக்காமல் விடுவது, அப்பாவைப் பார்க்காதப் பிள்ளைகள், அம்மாவை அறியாத சின்னஞ்சிறுசுகள், ஒற்றைப் பெற்றோரின் கவனிப்பில் வளரும் பிள்ளைகள், சேர்ந்து வாழும் பெற்றோரும் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ளாத சூழ்நிலை என்று குடும்பச் சிக்கல்களை அடுக்கிக் கொண்டே போகலாம். பெரியவர்கள் போடும் சண்டையில் அன்பென்றால் என்னவென்று தெரியாமல் ஆதரவற்று நிற்கும்

பிள்ளைகளைக் கடந்த பத்து ஆண்டுகளாகப் பார்த்துப் பார்த்து எனக்குத் திருமணத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை, ஆணிவேர்வரை ஆட்டம் கண்டிருந்தது என்ற உண்மையை அம்மாவிடம் சொல்ல முடியாது. அதுதான் திருமணத்தைப் பற்றிய விரக்திக்குக் காரணம் என்று சொன்னால், நான் வேறு பல ராகங்களை அம்மாவிடம் கலந்து கேட்க நேரிடும் என்பதால், "காலம் வரும்போது எல்லாம் நன்றாகவே நடக்கும்" என்று அவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன்.

"இல்லை என்றால், ஒரு பிள்ளையைத் தத்தெடுத்துக் கொள்ளலாம்," என்று அம்மாவிடம் சமாதானம் சொல்லி வைத்திருந்தேன். அதில் அவருக்கு அவ்வளவு நாட்டம் இல்லை என்பதை புரிந்து கொள்ள முடிந்தது.

சில நேரத்தில் நினைப்பதுண்டு, சிங்கப்பூரின் பரபரப்பான வாழ்க்கையில், எப்படித்தான் கல்யாணம் செய்து கொள்கிறார்களோ? அதிலும் சில பெற்றோர் ஏன்தான் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கிறார்களோ? ஆரம்பத்தில், காதல் போயின் சாதல் என்று உயிரைக் கொடுத்து, அப்பா, அம்மாவை எதிர்த்து, நண்பர்களையெல்லாம் உதறித் தள்ளிவிட்டு, காதலித்து கல்யாணம் செய்து கொண்ட சிலர், மூன்று அல்லது ஐந்து ஆண்டுக்குள் ஒருவரின் உயிரை ஒருவர் எடுக்கும்படி நடந்து கொள்வது ஏன் என்று விளங்கவில்லை. திருமணத்திற்கு ஆயிரமாயிரம் வெள்ளியைக் கொட்டி திருமணம் கட்டிக் கொண்டபின், அதைவிட அதிகமாகச் செலவு செய்து நீதிமன்றம், வக்கீல் என்று அலைகிறார்கள். கணவனைக் கேட்டால் மனைவியின் குறைகளைக் குறைவே இல்லாமல் பட்டியல் போடுவான்.

மனைவியைக் கேட்டால், கணவனைப் பற்றி தனக்கு மட்டுமே தெரிந்த, மற்றவர்களுக்குத் தெரியக்கூடாத தெரிய தேவையில்லாத விவரங்களை எல்லாம் ஒளிவு மறைவின்றி பதிவு செய்து வைத்திருப்பார். இருவரையும் பேசச் சொல்லி கேட்டால், இருவருமே சரியாகத்தான் சொல்கிறார்கள் என்று தோன்றும். போட்டா போட்டியில், அவர்கள் யார் சரி என்பதை பல நீதிமன்ற அறிக்கைகள் மூலம் வாதிட்டுக் கொண்டு இருப்பார்கள். அவர்களுக்குக் குழந்தைகள் இருந்தால், அது யார் பக்கம் சேர வேண்டும், எந்தெந்த நேரத்தில் பிள்ளைகளைப் பார்க்க அனுமதிக்க வேண்டும், எவ்வளவு பராமரிப்புப் பணம் கட்ட வேண்டும் என்று ஏகப்பட்ட இழுபறிகள். குடும்பத்திற்காக வாங்கிய வீட்டின் சந்தை விலை என்ன, அதை எப்படி விற்று, யார் யாருக்கு எவ்வளவு தொகையை ஒதுக்கி வங்கியில் போட்டுக் கொள்ளலாம், என்று முன்னாள்

தம்பதிகள் கணக்குப் போடுகிறார்கள். விவாகரத்து செய்து கொள்ளும் தம்பதிகள், புதிய வாழ்க்கைளைத் தொடங்குவதாக நினைத்து, இருக்கிற அனைத்தையும் இழந்து, பிள்ளைகளை பெரிய மனஉளைச்சலுக்கு ஆளாக்கிவிடுகிறார்கள் என்பதுதான், நான் அனுபவத்தில் பார்த்தவை. என்னைப் பொறுத்தரை, விவகாரத்து செய்து கொண்டவர்களின் பிள்ளைகள், பள்ளிக்கு வரும்போது புத்தகச் சுமைக்கும் மேல் குடும்பச் சுமையைத்தான் பெருமளவில் சுமந்து வருகிறார்கள்.

பாடம் சொல்லிக் கொடுக்கும்போது, பிரிந்த பெற்றோரிடம் சிக்கிக் கொண்ட பல மாணவர்கள் எப்போதும், எங்கோ  வானத்தில் சிறகடித்துப் பறந்து கொண்டு இருப்பதைப் பார்த்திருக்கிறேன். அதுதான் அவர்களுக்குக் கிடைக்கும் சில நிமிட நிம்மதி. அப்படி அடிக்கடி சிறகடித்துப் பறப்பவன்தான், கண்ணன்.

வயதுக்கு ஏற்ற உயரம், சுருண்ட முடி, ஒல்லியான உடல், எளிமையான தோற்றம் என்பதுதான் கண்ணன். துறுதுறுவென்று இருக்க வேண்டிய வயதில், அவன் அமைதியாகவே எதையும் செய்தான். தேவை ஏற்பட்டால் பேசும் கண்ணன், தேவையான வீட்டுப்பாடங்களையும் படிப்பையும் சமாளிக்கச் சிரமப்பட்டான்.

அவனது அப்பாவும் அம்மாவும் சிறையில். எண்பது வயதைத் தாண்டிய பாட்டிதான் இப்போது கண்ணனை வளர்க்கிறாராம். அப்பா போதைப் பொருள் வைத்திருந்தக் குற்றத்திற்கு போலிசிடம் மாட்டிக் கொண்டு, மரண தண்டனையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறார். நீதிமன்ற வழக்கு, மேல் முறையீடு, அதிபர் கருணை மனு போன்று முறைப்படி நடப்பவை எல்லாம் ஒரு பக்கம் சடங்குக்காக நடந்து கொண்டிருந்தன. அம்மா, போதைப் பொருள்

பயன்படுத்தியக் குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டு இருபது ஆண்டு சிறை தண்டனையை அனுபவிக்கிறார். மயக்கம் தெளிந்து பல வருடங்களுக்குப் பிறகு அவர் வெளியே உயிரோடு வந்துவிடுவார். பையன் அதற்குள் இருபது வயதைத் தொட்டிருப்பான். அவனது ஒன்பது வயதுப் பருவம், ஏக்கத்திலும் ஏமாற்றத்திலும் வெறுமையிலும், வறுமையிலும் இப்போது நகர்ந்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் பார்க்க முடிந்தது.

கண்ணன், என் ஆசிரியர் தொழிலில் கடந்த பத்து ஆண்டுகளில் பார்த்தவர்களில், ஆக மோசமான சூழ்நிலைக்குப் பலியான சிறுவன். எப்போதும் அவனுண்டு, அவன் வேலையுண்டு என்று இருப்பான். வகுப்பில் யாரோடும் அதிகம் பேசுவதில்லை. கேட்கும் கேள்விக்கு ஓரிரு வார்த்தைகளில் பதிலைச் சொல்லி முடிப்பான். அவன் படிப்பது ரொம்பவும் குறைவு. எந்த

வீட்டுப்பாடமும் முழுமையாக செய்து முடித்துக் கொடுத்ததே இல்லை! பாட்டியிடம் எடுத்துச் சொல்ல, கைப்புத்தகத்தில் எழுதி அனுப்பினால், எந்தப் பதிலும் கிடைக்காது. கண்ணன் தொடர்ந்து படிக்கவில்லை என்றால், அவன் நான்காவது செல்வது, முடியாத காரியம். ஆறாம் வகுப்புவரைக் கட்டாயக் கல்வி என்று சட்டம்தான் போட முடியும். ஆனால், உள்ளுக்குள் இருக்கும் இதைப்போன்ற சிக்கல்களைச் சட்டம் எப்படிச் சரி செய்யும்?

மூன்றாம் வகுப்புக்கான இறுதித் தேர்வுக்கு இன்னும் நான்கு மாதம்தான் இருந்தது. கண்ணனைப் பற்றி மற்ற ஆசிரியர்களிடம் பேசினேன். இருபது ஆண்டுகளாக ஆசிரியராக இருக்கும் திருமதி மேகலா, "அருண், நம்ம சிங்கப்பூர் சமூகத்தில் விவாகரத்து, சமூகப் பிரச்சனை எல்லாம் தலை விரித்து ஆடத் தொடங்கிட்டுது. பத்து ஆண்டுக்கு முன்னர் இத்தனைப்

பிள்ளைகள் பெற்றோரைப் பிரிந்திருக்கவில்லை. இப்ப பாருங்க, வகுப்புக்குக் குறைந்தது ஐந்து பிள்ளைகள் இருக்கிறார்கள். கண்ணனுடையது பரிதாபமான நிலைதான். ஆனா, என்ன செய்வது? நம்ம கையிலே என்ன இருக்கு? அவனுக்கு எதிர்காலம் சிறப்பா இருக்கும்னு என்னால உறுதியா சொல்ல முடியாது. நீங்க ரொம்ப மனசைப் போட்டு அலட்டிக்காம, உங்க வேலையைப் பாருங்க. நமக்கு வேலை இருக்கு. ஒரு மாணவனை மட்டும் கவனிக்க முடியாது. இதெல்லாம் அரசாங்கம் கவனிக்க வேண்டியவை. நீங்க பேசாமல் சம்பளம் எடுங்க. போனஸ் நிறைய கொடுக்கிறாங்க. அதை வைச்சு நம்ம வாழ்க்கையை ஓட்டுவோம்," என்றார்.

அவர் சொன்னதில், சராசரி சிங்கப்பூர் மனிதனின் வாழ்க்கைக் கணக்குப் பளிச்சிட்டது. மற்றவர்களைப் பற்றி கவலைப்பட வேண்டும் என்றால், ஆண்டுக்கு

ஒரு தொகையை நன்கொடையாக எழுதிக் கொடுத்துவிட்டு, பரிவுமிக்கவர் என்ற பெயரை வாங்கிக் கொள்ளலாம். இல்லை, அரசாங்கம் கவனித்துக் கொள்ளும், இது அவர்கள் பொறுப்பு என்று சொல்லிக் கொள்ளலாம். நமக்கு அருகில் நடைபெறும் துயரங்களை ஏன் நேரில் தொட்டுத் துடைக்க நினைக்க வேண்டும் என்பது விசித்திரமான சிந்தனைதான். நான் மேகலா ஆசிரியரிடம் மறுத்துப் பேசாமல், அவருடைய வயதுக்கும் அனுபவத்திற்கும் மரியாதை கொடுக்கும்படி, சரி என்று தலையை ஆட்டிவிட்டுச் சென்றுவிட்டேன்.

அன்று வெள்ளிக்கிழமை, என்றும் பள்ளிக்குத் தாமதமாக வரும் கண்ணன், அன்றும் யாரையும் ஏமாற்றாமல் தாமதமாகவே வகுப்பறைக்கு வந்தான். நான் இருக்கைக்குச் செல் என்று சொல்லிவிட்டு, பள்ளி முடிந்ததும், என்னைப் பார் என்றேன்.பள்ளி

முடிந்ததும், கண்ணன் என் அறைக்கு வந்தான். உட்காரச் சொன்னேன். சோர்வாக வந்து நாற்காலியில் சாய்ந்தான். அவன் கண்களில் விரக்தி பரவிக் கிடந்தது. நானே பேசத் தொடங்கினேன். "கண்ணா, உனக்கு நிறைய பிரச்சனை என்று தெரியும். அம்மா, அப்பா இல்லை உன்னோட இல்லையே என்கிற ஏக்கம் இருக்கு. சில வேளைகளில் நாம் சிரமங்களைச் சமாளிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இல்லாததை நினைத்து வருத்தப்படுவதை விட, இருப்பதை வைத்து மகிழ்ச்சி அடைய வேண்டும். இன்னும் மூன்று மாதத்தில் பரீட்சை வரப்போகிறது. நீ புத்திசாலிப் பையன். நீ படித்தால் நல்ல மதிப்பெண் வாங்க முடியும் என்பது என்னுடைய நம்பிக்கை. உனக்கு என்ன வேண்டும் என்றாலும் என்னிடம் கேள். நான் உனக்குச் செய்து கொடுக்கிறேன். எதைப் பற்றியும்

கவலைப் படாமல், படிக்கிறாயா?" ஆதரவாக கண்ணனிடம் கேட்டேன்.

கண்ணன், நான் சொன்னதை எல்லாம் அமைதியாகக் கேட்டபடி தலையாட்டினான். பிறகு, "சார், பள்ளி முடிந்ததும், கூடுதல் வகுப்பு இருக்கு, ஆனால் எனக்கு ரொம்பப் பசிக்கிறது. காலையில் இருந்து இன்னும் சாப்பிடல. பாட்டிக்கு உடம்பு முடியல. அவரைத் தொல்லை செய்யாமல் காலையில் பச்சைத் தண்ணி மட்டும் குடிச்சிட்டு வந்துட்டேன்!" என்று தயங்கியபடி மெல்லச் சொன்னான். என் கண்கள் சற்று நேரம் கலங்கி விட்டன. எட்டு வயது பையன் காலையில் இருந்து ஒன்றுமே சாப்பிடாமல் இருப்பதா? உடனே அழைத்துச் சென்றேன், பள்ளியின் சிற்றுண்டிச் சாலைக்கு அல்ல, வெளியில் இருந்த 'மெக்டானல்ட்' கடைக்கு. அவனுக்கு வேண்டிய சாப்பாட்டை வாங்கிக் கொடுத்து

கண்ணனுடன் பேசிக் கொண்டிருந்தேன். கண்ணனுக்கு விரைவு உணவு மிகவும் பிடிக்கும் என்றாலும் அவன் அங்கே சென்றது ஒரு சில முறைதான். அதுதான் நான் கண்ணனின் வாழ்க்கையில் நேரடியாகத் தலையிட்டு, அவனைக் கவனிக்கத் தொடங்கிய முதல் சம்பவம். அன்று முதல், அவன் சாப்பிடுவதில் இருந்து வீட்டுப்பாடம் செய்வது அனைத்தையும் கவனிப்பது என் பகுதிநேர வேலையானது. கண்ணன் என்னை நம்பத் தொடங்கினான், நானும் அவன் நன்றாகப் படித்துத் தேறுவான் என்று நம்பிக்கை வைக்க ஆரம்பித்தேன்.

நான் கண்ணனுக்குச் செய்யும் கவனிப்பைப் பார்த்த மற்ற ஆசிரிய நண்பர்கள், " என்ன அருண், அந்தப் பையன் மீது இவ்வளவு அக்கறை காட்டுகிறீர்களே? நேரம் எங்கிருந்து கிடைக்கிறது. அவன் சுமாரான பையன், குடும்பப் பிரச்சனை வேறு,

என்னதான் செய்தாலும், அவனுக்குப் படிப்பு வராது!" என்றனர். அவநம்பிக்கை குரல்கள் அடிக்கடி காதில் ஒலித்தாலும், நான் கண்ணனைக் கவனிப்பதில் குறை ஏதும் வைக்கவில்லை. முடிந்ததைச் செய்தேன். முடியாதபோது, இயலாமையை நினைத்துத் தனிமையில் வருத்தப்பட்டேன்.

அவ்வப்போது வைக்கப்பட்ட வகுப்புத் தேர்வுகளில் கண்ணன், குறைந்த மதிப்பெண்களைப் பெற்றான். அவன் மீது வைத்திருந்த என் நம்பிக்கைக்கு அது சோதனையாகவே இருந்தது. அதற்காக நான் அவனை திட்டவில்லை. கேள்விகளை எப்படி கவனிக்க வேண்டும், அதற்கு ஏற்றபடி எப்படி பதில் அளிக்க வேண்டும் என்பவற்றைப் பற்றி விளக்கினேன்.

"பள்ளியில் படிக்கும் பாடங்களோடு, செய்தித்தாள், புத்தகம் படிக்கும் பழக்கத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்," என்றேன்.

பள்ளி நூலகத்தில் கிடைக்கும் புத்தகங்களை எடுத்துச் சென்று படிக்கும்படி கண்ணனிடம் சொன்னேன். எப்படிப் படிக்க வேண்டும், எதைப் படிக்க வேண்டும் என்று அவனுக்கு என்னால் வழி காட்ட முடிந்தது. கண்ணனும், பொறுப்போடு நடந்து கொண்டான் என்றுதான் எனக்குத் தோன்றியது.

நாட்கள் நகர்ந்து ஓடி, இறுதித் தேர்வுக்கான நாளைத் தொட்டது. பரீட்சை காலையில் தொடங்கியது. தொடர்ந்து நான்கு நாட்கள் பரீட்சை. கண்ணனும் தேர்வுகள் அனைத்தையும் எழுதினான். இறுதியாகக் கணக்குத் தேர்வு வெள்ளிக்கிழமை நடந்தபோது, கண்ணனின் முகத்தில் ஏதோ ஒரு கலக்கம் இழையோடிக் கொண்டு இருந்தது. பரீட்சை

என்றாலே மாணவர்களுக்கு அந்தக் கலக்கமும் நடுக்கமும் வருவது வழக்கம்தான் என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன். அதிலும் இப்போது தொடக்கநிலைப் பள்ளிகளின் தேர்வுத் தாள்களைப் பார்த்து, படித்த பெரியவர்களே மிரண்டு போகும்போது, சிறுவர்கள் பயப்படுவதில் ஒன்றும் தவறில்லை. அவன் தேர்வில் நன்றாகச் செய்வான் என்ற நம்பிக்கை, எனக்கு மட்டுமே இருந்தது. கடந்த மூன்று மாதமாகப் பள்ளி முடிந்து குறைந்தது இரண்டு மணி நேரமாவது அவனுக்கு நான் பாடம் சொல்லிக் கொடுத்து வந்திருக்கிறேன். என்னுடைய கணிப்பு சரியாக இருந்தால், அவன் நன்றாகப் படிக்கக்கூடியவன். புத்தி கூர்மையான சிறுவன். சொல்லிக் கொடுப்பதை புரிந்து கொண்டு, சொந்தமாக முயற்சி எடுத்து பாடத்தைப் படிக்கும் ஆர்வம் உள்ளவன் என்பதை அறிந்தேன்.

கண்ணனுக்கு இலவசமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்குப் பதில் துணைப்பாட வகுப்பு நடத்தி மணிக்கு முன்னூறு வெள்ளி சம்பாதித்து இருக்கலாமே என்று என் சக ஆசிரியர்கள் சொல்லக் கேள்விப்பட்டு இருக்கிறேன். இந்தப் பையனுக்கு ஏதோ என்னால் முடிந்த சிறிய சேவை, இதைத் தர்ம கணக்கில் எழுதினாலும் பரவாயில்லை என்று தயங்காமல் சொன்னேன். கடைசிப் பரீட்சை முடிந்ததும், கண்ணனிடம் ஒரு மணிக்கு என்னைப் பார்க்கும்படி சொன்னேன்.

சிற்றுண்டிச் சாலையில் காத்திருந்த கண்ணனைப் பார்த்து, "என்ன கண்ணா, இன்று வெள்ளிக்கிழமை கடைசிப் பரீட்சை, ஒழுங்கா எழுதினாயா?" என்று கேட்டேன்.

"நீங்க சொல்லிக் கொடுத்தபடி எல்லாவற்றையும் எழுதினேன் சார்," கண்ணன் கலக்கம் கலந்த குரலில் சொன்னான்.

"நீ நிச்சயம் நல்ல மதிப்பெண் வாங்குவாய். எனக்கு உன்மேல் நிறைய நம்பிக்கை இருக்கிறது," என்று ஆதரவாகப் பேசிய நான், மேலும் தொடர்ந்தேன். "நீ நல்ல மதிப்பெண் பெற்றால், உனக்கு ஒரு பெரிய பரிசு கொடுப்பேன்?" என்றேன்¢. பிள்ளைகள், பரிசு என்றாலே மகிழ்ச்சி அடைவார்கள். கண்ணன் புன்னகையோடு, வேறு ஏதும் சொல்லாமல் விடைபெற்றுக் கொண்டான்.

சில நாட்களுக்குப் பிறகு, தேர்வு முடிவுகள் வெளிவந்திருந்தன. கண்ணன் மொத்த மதிப்பெண்களின்படி, 'பேண்ட்' இரண்டு நிலையில் தேறி இருந்தான். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. தேறவே மாட்டான் என்று சக ஆசிரியர்கள் முடிவு

கட்டி இருந்த கண்ணன், இன்று படிக்க முடியும் என்பதைக் காட்டி இருந்தான். குறிப்பாக, வெள்ளிக்கிழமை எழுதிய கணக்குப் பாடத்தில் கண்ணன் நல்ல மதிப்பெண்களைப் பெற்றிருந்தான்.

சிற்றுண்டிச் சாலையில் கண்ணனைப் பார்த்து, பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டேன். அதிலும் குறிப்பாகக் கணக்குப் பாடத்தில் நல்ல மதிப்பெண் வாங்கி இருப்பதைப் பற்றி பாராட்டினேன். பரிசு வந்து கொண்டே இருக்கிறது என்றும் கண்ணனிடம் சொன்னேன்.

முகத்தில் சிரிப்பை சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்ட கண்ணன், "சார், ஒரு விசயம் சொல்லனும், கணக்குப் பாடப் பரீட்சை அன்றைக்குக் காலையில் நான் பள்ளிக்குப் கிளம்பியபோது பாட்டி சொன்னாங்க, இன்னைக்கு அப்பாவைத் தூக்கில் போடுவாங்க. அப்பாவை இனி பாக்கவே முடியாது. கவலைப்படாமல்

பள்ளிக்குப் போ, நல்லா படி. உன்னை நீதான் காப்பாத்திக்கனும்" என்றார். அதுக்கப்புறம் நான் பள்ளிக்கு வந்துட்டேன். ஆனா தூக்குன்னா என்ன சார்? ஏன் அப்பாவை அதிலே போடனும்? " என்று கண்ணன் என்னிடம் கேட்டான்.

கண்ணன் சொன்னதைக் கேட்டு எனக்குள் ஏற்பட்ட அதிர்ச்சியை அளவிட முடியாது. அவன் சொன்னவை என்னை உறைய வைத்தன. தூக்கு பற்றி விளக்கம் கொடுக்கும் நிலையில் நான் அப்போது இல்லை. சட்டம் ஏன் மனிதர்களைக் கொல்கிறது என்பதை எப்படி கூறி விளங்கவைப்பது.

அவன் கையைப் பற்றிக் கொண்டு சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு, "ஒன்றும் கவலைப் படாமல் நீ வீட்டுக்குப் போ, நான் பிறகு உன் பாட்டியிடம் பேசுகிறேன்," என்று பெருமூச்சு விட்டபடி சொன்னேன்.

உண்மைதான், கண்ணனின் அப்பா, தூக்கிலிடப்பட்டிருந்தார். மேல் முறையீடு, அதிபர் கருயை மனு என்று எதுவும் கண்ணன் அப்பாவிற்கான தண்டனையை தடுக்கவோ, தள்ளிப் போடவோ இல்லை. சாங்கி சிறைச்சாலையில் கண்ணனின் அப்பா, போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காகத் தூக்கிலிடப்பட்டார். உடலை அரசாங்கமே அடக்கம் செய்துவிடும்படி, பாட்டி சொல்லிவிட்டார். ஆகவே, கண்ணன், அவனுடைய அப்பாவை இனி பார்க்கவே முடியாது. இது எந்த அளவுக்குக் கண்ணனுக்குப் புரியும், புரியவைக்க முடியும் என்று எனக்குத் தெரியாது. பெற்றோர் செய்த தவற்¢றுக்குப் பிள்ளைகள் தண்டனை அனுபவிப்பது என்பது இதுதானோ என்று அந்த நேரத்தில் எனக்குத் தோன்றியது. பரீட்சையில் நல்ல மதிப்பெண் வாங்கிய கண்ணனுக்கு இனி என்ன பரிசு கொடுத்தாலும் அது அவனுடைய இழப்புக்கு

ஈடாக இருக்காது.  நிதானமாக யோசித்தேன். ஒரு நாள் எந்த வேலையையும் செய்யாமல், அதைப்பற்றி மட்டும் தீவிரமாக சிந்தித்தேன். பிறகுதான், அந்த முடிவுக்கு வந்தேன்.

என்னைப் பற்றிய விவரங்களைத் தொகுத்து, பிள்ளைகளைத் தத்தெடுக்கும் சமூக வளர்ச்சி அமைச்சின் பிரிவுக்கு மின் அஞ்சல் அனுப்பினேன். பிள்ளைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய, பல்வேறு சட்டதிட்டங்களை வகுத்து வைத்திருக்கிறார்கள். மின் அஞ்சலில், கண்ணனை என் கண்காணிப்பில் வைத்து வளர்க்க உதவும்படி மன்றாடி வேண்டிக் கேட்டுக் கொண்டிருந்தேன். எல்லாம் நன்றாக நடந்தால், கண்ணனுக்கு நான் கொடுக்கக்கூடிய சிறந்த பரிசு, என் அன்புதான்.

**-சுபம்-**

**Total words: 1950**